[1981 ஏப்ரல் 16]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 37.

திரு. த. வேணுகோபால் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 37 பொதுப்பணிகள்-கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,83,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 38.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

"மானியக் கோரிக்கை எண். 38 பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,59,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 51.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 51 பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,36,32,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

7. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :—

"பேரவை உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப 18.4.1981-சனிக்கிழமையன்று பேரவைக் கூட்டம் இல்லாமல், 18.4.1981-சனிக்கிழமையன்றும், 20.4.1981-திங்கட்கிழமை அன்றும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை எண். 20-வேளாண்மை, மானியக் கோரிக்கை எண். 48-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவை 20.4.1981-திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்பெற்று, அன்றே விவாதம் முடிவுற்று, வாக்கெடுப்பும் நடத்தப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 18.4.1981-சனிக் கிழமை பேரவைக் கூட்டம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் களுக்கு ஏற்கனவே சனிக்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்பெறும் என்று அளிக்கப்பெற்றிருந்த வினாப்பட்டியல் வேறு ஒரு நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (20.4.1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

256. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் 2 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதி செயலுக்கு வரும் நாளாக 18.3.1981 ஆம் தேதியை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 17.3.1981 ஆம் தேதியிடப் பெற்ற 47 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS